ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ புள்ளாய் ஏனமுமாய் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ புள்ளாய் ஏனமுமாய் ॥

## திருநறையூர் - 9

‡புள்ளாய் ஏனமுமாய்ப்⋆ புகுந்து⋆ என்னை உள்ளம் கொண்ட
கள்வா! என்றலும்⋆ என் கண்கள் நீர்கள் சோர் தருமால்⋆
உள்ளே நின்றுருகி⋆ நெஞ்சம் உன்னை உள்ளியக்கால்⋆
நள்ளேன் உன்னை அல்லால்⋆ நறையூர் நின்ற நம்பீயோ! (1)

ஓடா ஆளரியின்⋆ உருவாய் மருவி⋆ என்தன்
மாடே வந்து⋆ அடியேன் மனம் கொள்ள வல்ல மைந்தா⋆
பாடேன் தொண்டர் தம்மைக்⋆ கவிதைப் பனுவல் கொண்டு⋆
நாடேன் உன்னை அல்லால்⋆ நறையூர் நின்ற நம்பீயோ! (2)

எம்மானும் எம்மனையும்⋆ என்னைப் பெற்றொழிந்ததற்பின்⋆
அம்மானும் அம்மனையும்⋆ அடியேனுக்காகி நின்ற⋆
நன்மான வொண் சுடரே!⋆ நறையூர் நின்ற நம்பீ!⋆ உன்
மைம்மான வண்ணம் அல்லால்⋆ மகிழ்ந்தேத்த மாட்டேனே (3)

சிறியாய் ஓர் பிள்ளையுமாய்⋆ உலகுண்டோர் ஆலிலை மேல்
உறைவாய்⋆ என் நெஞ்சினுள்ளே உறைவாய்⋆ உறைந்தது தான்⋆
அறியாதிருந்தறியேன்⋆ அடியேன் அணி வண்டு கிண்டும்⋆
நறை வாரும் பொழில் சூழ்⋆ நறையூர் நின்ற நம்பீயோ! (4)

நீண்டாயை வானவர்கள்⋆ நினைந்தேத்திக் காண்பரிதால்⋆
ஆண்டாய் என்றாதரிக்கப் படுவாய்க்கு⋆ நான் அடிமை பூண்டேன்⋆
என் நெஞ்சினுள்ளே⋆ புகுந்தாயைப் போகல் ஒட்டேன்⋆
நாண் தாண் உனக்கொழிந்தேன்⋆ நறையூர் நின்ற நம்பீயோ! (5)

எந்தாதை தாதை அப்பால்⋆ எழுவர் பழவடிமை
வந்தார்⋆ என் நெஞ்சினுள்ளே⋆ வந்தாயைப் போகல் ஒட்டேன்⋆
அந்தோ! என்னாருயிரே!⋆ அரசே! அருள் எனக்கு⋆
நந்தாமல் தந்த எந்தாய்!⋆ நறையூர் நின்ற நம்பீயோ! (6)

www.prapatti.com

மன்னஞ்ச ஆயிரம் தோள்⋆ மழுவில் துணித்த மைந்தா⋆
என் நெஞ்சத்துள் இருந்து⋆ இங்கினிப் போயப் பிறர் ஒருவர்⋆
வன்னெஞ்சம் புக்கிருக்கல் ஒட்டேன்⋆ வளைத்து வைத்தேன்⋆
நன்னெஞ்ச அன்னம் மன்னும்⋆ நறையூர் நின்ற நம்பீயோ! (7)

எப்போதும் பொன் மலரிட்டு⋆ இமையோர் தொழுது⋆ தங்கள்
கைப்போது கொண்டிறைஞ்சிக்⋆ கழல் மேல் வணங்க நின்றாய்⋆
இப்போதென் நெஞ்சினுள்ளே⋆ புகுந்தாயைப் போகல் ஒட்டேன்⋆
நற்போது வண்டு கிண்டும்⋆ நறையூர் நின்ற நம்பீயோ! (8)

ஊனேர் ஆக்கை தன்னை⋆ உழந்தோம்பி வைத்தமையால்⋆
யானாய் என் தனக்காய்⋆ அடியேன் மனம் புகுந்த
தேனே!⋆ தீங்கரும்பின் தெளிவே!⋆ என் சிந்தை தன்னால்⋆
நானே எய்தப் பெற்றேன்⋆ நறையூர் நின்ற நம்பீயோ! (9)

‡நன்னீர் வயல் புடை சூழ்⋆ நறையூர் நின்ற நம்பியை⋆
கன்னீர மால் வரைத் தோள்⋆ கலிகன்றி மங்கையர் கோன்⋆
சொன்னீர சொல் மாலை⋆ சொல்லுவார்கள்⋆ சூழ் விசும்பில்
நன்னீர்மையால் மகிழ்ந்து⋆ நெடுங்காலம் வாழ்வாரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com